**பிப்ரவரி – 14**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழிற்சாலைகள் சங்கம் (CODISSIA - Coimbatore District Small Industries Association) என்றழைக்கப்படும் கொடீசியா தொழிற்சாலைப் பூங்காவை கோயம்புத்தூரில் துவக்கி வைத்தார். 1969-ஆம் ஆண்டில் சிறு தொழிற்சாலை அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இந்த வருடம் தனது 50-வது ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடுகின்றது.
- தொழிற்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரான K. ஞான தேசிகனை தமிழக அரசு, தமிழ்நாடு நில விற்பனை ஒழுங்குமுறை ஆணையத்தின் (Real Estate Regulatory Authority - RERA) தலைவராக நியமித்திருக்கின்றது.
- இமாச்சலப் பிரதேசத்தின் யுனா மாவட்டத்தில் உள்ள சிங்ஹென் கிராமத்தில் கிரெமிகா உணவுப் பூங்கா நிறுவனம் என்பதை மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பாதல் துவக்கி வைத்தார்.
    - இமாச்சலப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் முதல் மிகப்பெரும் உணவுப் பூங்கா இதுவாகும்.
- இருதரப்பு வர்த்தகத்தில் வரி அல்லாத தடைகள் மற்றும் பல்வேறு இருதரப்பு விவகாரங்களின் மீது விவாதத்தை ஏற்படுத்திட இந்திய - நேபாள வர்த்தக உடன்படிக்கையை மதிப்பிடும் 2-வது கூடுதல் செயலாளர் மட்டத்திலான சந்திப்பு இரண்டு நாள் சந்திப்பாக நேபாளத்தின் போக்ஹரா நகரில் நடத்தப்பட்டது.
- இந்தியா - நார்வே கடல் மாசுக் கட்டுப்பாட்டு முயற்சியை ஏற்படுத்துவதற்காக இந்தியாவும் நார்வேயும் ஒரு நோக்கத்திற்கான கடிதத்தில் கையெழுத்திட்டன.
- தென் ஆப்பிரிக்காவிற்கான இந்தியாவின் உயர் ஆணையராக தற்சமயம் பணியாற்றிக் கொண்டிருக்கும் ருச்சிரா காம்போஜ் பூடானிற்கான இந்தியாவின் தூதராக நியமிக்கப்பட்டார்.
- ஜெனீவா நகரம் சமீபத்திய ஒரு விவாதத்திற்குள்ளான மதச்சார்பின்மைச் சட்டத்தின் மீது அதன் குடியிருப்பாளர்கள் 55 சதவிகிதம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததற்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு ஊழியர்கள் மத அடையாளங்களை அணிவதைத் தடை செய்திருக்கின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## கொடீசியா - பாதுகாப்பு புத்தாக்க மையம்

- பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருச்சியில் கோவை மாவட்ட சிறு தொழில் அமைப்பு எனப்படும் கொடீசியாவின் பாதுகாப்பு புத்தாக்க மையத்தை (CODISSIA - Coimbatore District Small Industries Association) துவக்கி வைத்தார்.
- அவர் தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்சாலை பெருவழிப் பாதைத் திட்டத்தின் கீழ் புதிய திட்டங்களை ஆரம்பிக்கும் சமயத்தில் கொடீசியாவின் அலுவல் நிர்வாகிகளுக்கு ஒரு சான்றிதழை வழங்கினார்.

- நாட்டில் இதுபோன்ற முதலாவது மையம் இந்த கொடீசியா பாதுகாப்புப் புத்தாக்க மற்றும் உற்பத்தி மையமே ஆகும்.

# தேசியச் செய்திகள்

## பெட்ரோடெக் 2019

- உத்திரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டா நகரில் இந்தியாவின் அதிஅற்புதமான ஹைட்ரோ கார்பன் மாநாட்டின் 13-வது பதிப்பான பெட்ரோடெக் 2019 என்ற மாநாடு இந்திய கண்காட்சி மையத்தில் பிரதமரால் துவக்கி வைக்கப்பட்டது.
- இந்த மூன்று நாள் நிகழ்வு 95 நாடுகளைச் சேர்ந்த ஆற்றல் துறை அமைச்சர்களுடன் ஏறக்குறைய 70 நாடுகளைச் சேர்ந்த 7000 பிரதிநிதிகள் கலந்து கொண்ட நாட்டின் மிகப்பெரிய ஹைட்ரோ கார்பன் மாநாடு ஆகும்.
- இது மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் நடத்தப்படுகின்றது.
- 2016-ஆம் ஆண்டு டிசம்பரில் பெட்ரோடெக் மாநாட்டின் 12-ஆம் பதிப்பு புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- அமெரிக்கா மற்றும் சீனாவையடுத்து கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை நுகர்கின்ற உலகின் 3-வது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

## சேனா விருது

- காஷ்மீரின் உதம்பூரில், மேன்மை தங்கிய மற்றும் வீரச் செயல்கள் புரிந்தமைக்கான பட்டம் வழங்கும் விழாவில் 92 ராணுவ வீரர்களுக்கு சேனா விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்நிகழ்வில் 76 விருதுகள் வீரதீரச் செயல்களுக்காகவும் 7 விருதுகள் மேன்மை தங்கியச் செயல்களுக்காகவும் 8 விருதுகள் சிறப்புச் சேவைகளுக்காகவும் விருதாளர்களுக்கு வழங்கப்பட்டன.
- அசோக் சக்ரா விருதினைப் பெற்ற லான்ஸ் நாயக் நசீர் அகமது வாணியும் ஒரு கோலுடன் சேனா விருது வழங்கப்பட்டார். அவரது மறைவிற்குப் பிறகு அரசின் சார்பாக அவரது மனைவியால் அவ்விருது பெற்றுக் கொள்ளப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## இஸ்லாமியப் புரட்சியின் 40-வது ஆண்டு தினம்

- ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் 40-வது ஆண்டு தினக் கொண்டாட்டங்களை நிறைவு செய்திருக்கின்றது.
- 1979 புரட்சி அல்லது இஸ்லாமியப் புரட்சி ஈரானின் மன்னரான முகமது ரெசா ஷா பஹல்வி என்பவரின் மன்னராட்சியைத் தூக்கி எறிந்தது.
- அவரது அரசாங்கம், புரட்சியில் பங்கு பெற்ற ஒரு பிரிவின் தலைவரான அயதுல்லா ருஹல்லா கோஹ்மேய்னி என்பவரது தலைமையின் கீழ் ஒரு இஸ்லாமியக்

குடியரசாக நிறுவப்பட்டது.

- அமெரிக்க அரசால் ஆதரவளிக்கப்பட்ட இந்த மன்னராட்சிக்கு எதிரான புரட்சியானது பலதரப்பட்ட இடதுசாரி இயக்கங்கள், இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் மாணவர் அமைப்புகளால் ஆதரவளிக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## போயிங்கின் அதிஉயர சினூக் வானூர்திகள்

- குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தில் அமெரிக்காவிடமிருந்து போயிங் நிறுவனத்தின் சினூக் வானூர்தி விசைகளில் 15 என்ற எண்ணிக்கையின் முதல் 4 வானூர்திகளை இந்தியா பெற்றுக் கொண்டது.
- இந்த வானூர்தி ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட Mi-17 நடுத்தர உயரத்தில் பறக்கும் வானூர்திகள், Mi-26 வானூர்திகள், Mi-35 தாக்குதல் வானூர்திகள் ஆகியவற்றைப் பதிலீடு செய்யும்.



- சினூக் வானூர்திகள் ஒவ்வொன்றும் 9.6 டன்கள் எடை அளவிற்கு பொருட்களைத் தூக்கிச் செல்லும். இதில் மனிதர்களையும் பீரங்கிப் படை துப்பாக்கிகள், குறைந்த ஆயுதம் கொண்ட வாகனங்கள் உள்ளிட்ட இயந்திரங்களையும் உயரமான பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல முடியும்.
- போயிங்கைப் பொறுத்தவரை இது பேரிடர் நிவாரணம், மருத்துவ உதவி, தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், விமான மீட்பு மற்றும் வான்குடை மிதவை இறக்கம் (பாராசூட்) போன்ற நடவடிக்கைகளுக்கும் உதவிடும்.

# மாநிலச் செய்திகள்

## வாகனங்களில் கணினிக் கல்வி

- உத்திரப் பிரதேச முதல்வர் ‘நடமாடும் வாகனங்களின் மீதான ஹெச்பி கணினிக் கல்வி நிறுவனம்’ எனும் வசதியைத் துவக்கி வைத்தார்.

- இந்தப் பள்ளி மிகப் புகழ்பெற்ற கணினி நிறுவனமான HP இந்தியா என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இது சமூக அமைப்பான சேவா பாரத் என்ற நிறுவனத்தின் மூலம் இயக்கப்படும்.
- இவ்வகையான பள்ளி ஒன்றில், 1 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கல்வி தொடர்பான புத்தகங்கள் மற்றும் அதிநவீன வசதிகள் ஆகியவை ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளில் வழங்கப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## காமன்வெல்த்தின் கற்பதற்கான நல்லெண்ணத் தூதர்

- கேரளாவின் வயதான மாணவியான 96 வயதுடைய கார்த்தியாயினி அம்மா காமன்வெல்த்தின் கற்பதற்கான நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
- கடந்த காலங்களில் பள்ளிக் கல்வியைப் பெறாவிட்டாலும், கடந்த வருடம் கேரளாவின் அக்சரலக்ஷம் எழுத்தறிவுத் திட்டத்தில் 100-க்கு 98 மதிப்பெண்கள் அவர் பெற்றதோடு கேரள முதல்வரிடமிருந்து ஒரு நற்சான்றிதழையும் பெற்றார்.



- காமன்வெல்த் கற்பித்தல் என்பது கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் வான்கூவர் நகரைத் தலைமையகமாக கொண்ட காமன்வெல்த் என்ற ஒரு நாடுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது தனது 53 உறுப்பினர் நாடுகள் மத்தியில் தொலைதூரக் கல்வியையும் திறந்தநிலைக் கல்வியையும் ஊக்குவிக்கின்றது.


## டான் டேவிட் பரிசு – 2019

- இஸ்ரேலின் மிகப்பெருமை வாய்ந்த டான் டேவிட் பரிசினை இந்த வருடம் மிகப் புகழ்பெற்ற இந்திய வரலாற்று ஆசிரியரான சஞ்சய் சுப்ரமணியம் வென்றிருக்கின்றார்.

- இந்த விருது, முந்தைய நவீன யுகத்தில் ஆசியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் வடக்கு தெற்கு அமெரிக்க மக்கள் ஆகியோரிடையே ஏற்பட்ட கலாச்சார மோதல்களின் மீதான அவரது படைப்புக்காக அளிக்கப்பட்டது.
- அவர் பெரு வரலாற்றில் "கடந்த கால பரிமாணம்" என்னும் பிரிவில் தனது படைப்பிற்காக இவ்விருதை வென்றுள்ளார்.
- அவர் இப்பிரிவில் 1 மில்லியன் அமெரிக்க டாலர் பரிசுத் தொகையை சிகாகோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கென்னத் போமிரான்ஸ் என்பவருடன் பகிர்ந்து கொள்கிறார்.

*சர்வதேச டான் டேவிட் பரிசு*

- டான் டேவிட் பரிசு என்பது டெல் அவிவ் பல்கலைக்கழகத்தைத் தலைமையகமாகக் கொண்ட டான் டேவிட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டு சர்வதேச முயற்சி ஆகும்.
- இப்பரிசு ஒவ்வொரு வருடமும் மனிதனின் கடந்த, நிகழ்கால மற்றும் எதிர்காலத்திய சாதனைகளைக் குறிப்பிடும் துறைகளில் அவர்கள் மேற்கொண்ட உன்னதமான அறிவியல்பூர்வ, தொழில்நுட்ப மற்றும் மனிதாபிமான சாதனைகளுக்காக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வருடமும் மூன்று டான் டேவிட் பரிசுகள் வழங்கப்படுகின்றன.




# விளையாட்டுச் செய்திகள்

## MRF சவால்


- இங்கிலாந்தின் ஜேமி சாட்விக் MRF சவால் போட்டியில் சரித்திரம் படைத்திருக்கின்றார்.
- அவர் ஏழு பருவங்களில் சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் பெண் ஓட்டுநராக சாதனை படைத்துள்ளார்.
- சென்னைக்கு அருகில் உள்ள மதராஸ் மோட்டார் ரேஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பெல்ஜியத்தின் மேக்ஸ் பீபோர்னி 2-வது இடத்தையும், பின்லாந்தின் பேட்ரிக் பாஸ்மா 3-வது இடத்தையும் பிடித்தனர்.



# முக்கிய தினங்கள்

## சர்வதேச வலிப்பு நோய் தினம் – பிப்ரவரி 11

- உலகம் முழுவதும் பிப்ரவரி 11-ஆம் தேதி சர்வதேச வலிப்பு நோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதத்தின் 2-வது திங்கட்கிழமை சர்வதேச வலிப்பு நோய் தினத்தை அனுசரிக்க மக்கள் ஒன்று கூடுகின்றனர்.




- இந்த உலகளாவிய சுகாதார நிகழ்ச்சியானது, இந்த உடல்நலக் குறைவு நோயாளிகளின் வாழ்க்கை, அவர்களது குடும்பங்கள், தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனுசரிக்கப்படுகின்றது.
- சர்வதேச வலிப்பு நோய்க்கான அமைப்பு மற்றும் வலிப்பு நோய்க்கு எதிரான சர்வதேச அணி ஆகியவற்றால் இத்தினம் ஆரம்பிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகின்றது.

# இதரச் செய்திகள்

## உதடு பிளவிற்கான கட்டணமில்லா தொலைபேசி எண்

- 2019-ஆம் ஆண்டு, பிப்ரவரி 8-ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் தேசிய உதடு பிளவு தினத்தன்று ஸ்மைல் பயிற்சி இந்தியா என்ற நிறுவனத்தால் "ஸ்மைல் டிரெயின் இந்தியா உதடு பிளவிற்கான உதவி எண்" என்று பெயரிடப்பட்ட இந்தியாவின் முதல் கட்டணமில்லாத தேசிய உதடு பிளவு உதவி எண் ஆரம்பிக்கப்பட்டது.
- 1800 103 8301 என்ற எண்ணானது இந்தியா முழுவதுமுள்ள மக்கள் அணுகிடும் வகையில் உள்ளது. அம்மக்கள் 100 சதவிகித இலவச, தரமான மற்றும் பாதுகாப்பான உதடு பிளவு சிகிச்சையைப் பெற முடியும்.




- இது இந்தியா முழுவதும் ஸ்மைல் டிரைன் மற்றும் அவர்களது நட்பு மருத்துவமனைகளால் அளிக்கப்படும் உதடு பிளவு சிகிச்சையைப் பற்றி விழிப்புணர்வை உருவாக்கிடும்.

- - - - - - - - - - - - - - -